# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்.B.E
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** தமிழகத்தில் வடக்கிழக்கு பருவமழை தீவிரமாக உள்ளதாலும், அதனை எதிர் கொள்ளும் வகையிலும், மழை பாதிக்கும் பகுதிகளில் வெள்ள தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து தொடர் அறிவுரைகள் வரப்பெற்றுள்ளது.அதன்படி இந்நகராட்சி பகுதிகளில் வடக்கிழக்கு பருவமழையை எதிர் கொள்ளும் வகையிலும், பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்திற்க்கொண்டும் பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட தளவாட பொருட்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2,50,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மண் வெட்டி | 20 |
| 2 | மண் பாண்டு | 40 |
| 3 | அலுமினிய கூடை | 40 |
| 4 | கை தகடு | 80 |
| 5 | மனல் அல்லும் சவுல் | 20 |
| 6 | கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் சவுல் | 40 |
| 7 | பிடிப்போட்ட கொந்தாளி | 40 |
| 8 | வாங்கு | 20 |
| 9 | சின்ன வாங்கு | 10 |
| 10 | தென்னந்துடப்பம் | 100 |
| 11 | இரும்பு கத்தி | 20 |
| 12 | புல் அலிக்கும் கம்பி படல் | 20 |
| 13 | பட்டா கத்தி | 10 |
| 14 | பெருக்கும் படல் | 48 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** .மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்4638/2018/எச்1)**
**<u>தீர்மான எண் : 289 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.2.</u>** தமிழகத்தில் வடக்கிழக்கு –2018 பருவமழை தீவிரமாக உள்ளதாலும், அதனை எதிர் கொள்ளும் வகையிலும், மழை பாதிக்கும் பகுதிகளில் வெள்ள தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து தொடர் அறிவுரைகள் வரப்பெற்றுள்ளது.அதன்படி இந்நகராட்சி பகுதிகளில் வடக்கிழக்கு பருவமழையை எதிர் கொள்ளும் வகையிலும், பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்திற்க்கொண்டும் பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட தளவாட பொருட்கள் கொள்முதல் செய்யவும், வாங்க 03.12.2018 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | | நிறுவனம் பெயர் | |
|---|---|---|---|---|
| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிகை | K.MARIMUTHU Register Municipal Contractor 49.Subramaniya Koil Steet, Pudupalayam.Cuddalore607001 | T.Seshadri Class Contractor No7/4 State Bank Colony Vandipalayam Road Thirupathiripuliyur.. Cuddalore607002 |
| 1 | மண் வெட்டி | 1 | 495 | 525 |
| 2 | மண் பாண்டு | 1 | 460 | 465 |
| 3 | அலுமினிய கூடை | 1 | 620 | 623 |
| 4 | கை தகடு | 1 | 85 | 95 |
| 5 | மனல் அல்லும் சவுல் | 1 | 450 | 468 |
| 6 | கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் சவுல் | 1 | 500 | 535 |
| 7 | பிடிப்போட்ட கொந்தாளி | 1 | 710 | 725 |
| 8 | வாங்கு | 1 | 315 | 329 |
| 9 | சின்ன வாங்கு | 1 | 285 | 293 |
| 10 | தென்னந்துடப்பம் | 1 | 22 | 30 |
| 11 | இரும்பு கத்தி | 1 | 670 | 685 |
| 12 | புல் அலிக்கும் கம்பி படல் | 1 | 486 | 495 |
| 13 | பட்டா கத்தி | 1 | 535 | 543 |
| 14 | பெருக்கும் படல் | 1 | 425 | 435 |

**அலுவலகக்குறிப்பு .** குறைந்த விலைப்புள்ளியினை அளித்த M/S K.MARIMUTHU Register Municipal Contractor 49.Subramaniya Koil Steet, Pudupalayam.Cuddalore607001 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அங்கீரிக்கலாம்

**(ந.க.எண்4638/2018/எச்1)**

**தீர்மான எண் : 290 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.3..** சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைகளின் படி நகர்பகுதிகளில் குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்யவும், நகர் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள டம்பர் பின்களை அகற்றவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.அதன்படி நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் உள்ள டம்பர்பின்கள் அகற்றப்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 09.11.2018 ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரையின் படி பயன்படுத்தப்படாத மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள டம்பர் பின்களை ஏலம் விட்டு விற்பனை செய்திட அறிவுறுத்தியுள்ளார்.அதன்படி இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள பயன்படுத்த இயலாத மற்றும் பயன்பாட்டில் இல்லாத டம்பர் பின்களை பொது ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் ஏல அறிவிப்பினை விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10000/– ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலகக்குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 4888/H1/2018)

**தீர்மான எண் : 291 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.4.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் தேங்கும் பகுதியில் 20, 21.11.2018 அன்று கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் முட்புதர்களை மண் அள்ளும் இயந்திரம் கொண்டு அகற்றவும் மேலும் மண் அள்ளும் இயந்திரத்தை தயார் நிலையில் வைத்திருந்திதற்கு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பட்டியல் தொகை ரூ.51000/–

திரு . அருண் , அம்மன் எர்தத் மூவர்ஸ் , திருவாமூர் , பண்ருட்டி அவர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டது . இது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .
அலுவலகக்குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 4920/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 292 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.5..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி செயல்முறை உத்திரவு ந.க.எண் . 30362/2016/P3 நாள் . 22.11.2018 . ன் படி தூய்மை இந்தியா திட்டம் 2016-17 (SWM) ஆம் ஆண்டின் கீழ் ரூ . 62.25/-இலட்சம் மதிப்பீட்டிற்கு கீழ் கண்ட பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக 28.11.2018 அன்று மாவட்ட அளவில் விளம்பரம் செய்த வகையில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , கடலூர் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு Express Publications (Madurai) Limited , அவர்களுக்கு ரூ.8014/- பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் . 30 சரவணபுரம் கரும்பு ஏற்றி செல்லும் சாலையில் 2 TPD கொள்ளவுடன் சுற்று சுவருடன் கூடிய MINI Micro Composting Centre அமைத்தல் பணி | 32.25 |
| 2 | மேல்பாதி உரக்கிடங்கில் சுற்று சுவர் அமைக்கும் பணி | 30.00 |

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2023/2016/இ1)**

**<u>தீர்மான எண் : 293 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.6 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் 2077 எண்ணிக்கை வீடுகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்க ரூ . 85.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 13277/2018/WS1 நாள் 19.06.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது .TUFIDCO நிறுவன கடித ந.கஎண்.TUFIDCO/URF1819-40ULBs/AM(M)/2018 நாள் .07.12.2018ல் 2077 குடிநீர் இணைப்புகள் வழங்க தொகை ரூ .69.82 லட்சம் (GST 12% மற்றும் தொழிலாளர் நல வாரிய பங்கு1% நீங்கலாக) Revolving Fund of UIDSSMT-ல் வட்டியில்லா கடனாக அனுமதிக்கப்பட்டுளளது.

அதன்படி 2077 குடிநீர் இணைப்புகளுக்கு 12% சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் தொழிலாளர் நல வாரிய பங்கு 1% ஆகியவைகளுடன், இப்பணிக்கான மதிப்பீடு ரூ.85.00 இலட்சம் ஆகும். அனுமதிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை ரூ.69.82 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.15.18 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்2020/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 294 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.7 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக பின்புறம் கட்டப்பட்டு வரும் அலுவலக கூடுதல் அலுவலக அறையில் False celing அமைக்கும் பணி , மேல்தளத்தில் அலுவலர்கள் மதிய உணவு அறுந்தும் கூடம் அமைக்கவும் , SO, SI ,RI ஆகிய அலுவலர்களுக்கு Alliuminium Partition அமைக்கவும் மற்றும்

Internet Net Wiring அமைக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.800000/– க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 0278/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 295 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.8 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பு பின்புறம் உள்ள மதில் சுவர் இடிந்து விழுந்து விட்டது . இதனால் சமுக விரோதிகள் நடமாட்டம் ஏற்படுகிறது . இதனை GI Sheet கொண்டு அடைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20000/– க்கும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு . S. புவனேஸ்வரி மூலம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 0277/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 296 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பெரியது 1 மற்றும் சிறிய (Mini Mount) 2 எண்ணம் பழுதடைந்துள்ளது.இதனால் நகர் பகுதிகளில் சுழற்ச்சி முறையில் கொசு மருந்து அடிக்க இயலவில்லை. தற்போது பருவமழை மற்றும் பணிக்காலம் என்பதால் நகர் பகுதிகளில் கொசுக்கள் அதிகமாக உள்ளதாலும், பொதுசுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் பழுதடைந்துள்ள புகை மருந்து அடிக்கும் இயந்திரத்தை உடன் சரி செய்யும் பொருட்டு, விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ .45000/–ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு .</u>** பொதுசுகாதாரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்5072/2018/எச்1)**

**<u>தீர்மான எண் : 297 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பெரியது 1 மற்றும் சிறிய (Mini Mount) 2 எண்ணம் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பொருட்டு 12.12.2018 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு .

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | System Engineering<br>No.1, Annai Sathya nagar,<br>Main road,Chennai- 89 | ரூ.39,200/– |
| 2 | S.N.Enterprises<br>1G, Rajaji Avenue, Valasaravakkam<br>Chennai - 87 | ரூ.40,085/– |
| 3 | Vigneshwari Industrial Products<br>110L. Ponnambalam Salai,<br>KK Nagar, Chennai - 78 | ரூ.40,910./– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட System Engineering ,Chennai- 89 என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைாக உள்ளதால், மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு .</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்5072/2018/எச்1)**

**<u>தீர்மான எண் : 298 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,

நெல்லிக்குப்பம் நகராட்சி